காரணத்தால் மதிப்பீட்டை உயர்த்திப் போட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே காலதாமதம் ஆகஆக ஆண்டுக் காண்டு முதலீடு உயர்ந்து கொண்டே போகும். ஆகவே, உடனடியாக அடித்தளம் போட்டவுடனே கட்டடம் கட்டக் கூடிய முறையில இனிமேலாவது இந்த ஒட்டப்பிடாரத்தில் உள்ள இந்த மாணவர் இல்லத்தை துரிதமாகக் கட்டிமுடிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு எம். விஜயசாரதி; அரசைப் பொறுத்தவரையில் விரைவில் இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. நன்னிலம் அ. கலையரசன்: மாவட்ட அரிசன நல அலுவலகத்தில் பணியாற்றக் கூடிய சூப்பர்வைசர்களுக்கு ரூ 500-க்குள் ளேதான் பள்ளிக்கூடங்கள் கட்ட முடியும் என்ற விதிமுறை இருக்கிறது. இந்த விதிமுறை ஐந்தாண்டுகளுக்கு முன்பு ஏற்படுத்தப்பட்ட விதியாகும். ஆகவே, இப்போது கல்லின் விலை, சிமெண்ட் விலை போன்றவை அதிகரித்துக் கொண்டிருப்பதால் அந்த சூப்பர்வைசர்களுக்கு விதிக்கப்பட்டிருக்கிற இந்த ரூ. 5,000 என்ற வரம்பினை உயர்த்தி ஆரம்பப் பள்ளிக்கட்டடங்கள் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு எம். விஜயசாரதி: அரசு பரிசீலனை செய்யும்.

மலைவாழ் மக்களுக்கென தனிக் கடன் நிவாரணச் சட்டம்.

*வினா எண். 965)— திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மலைவாழ் மக்களுக்கென தனிக் கடன் நிவாரணச் சட்டம் இயற்றப்படுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது இயற்றப்படும்?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) மலைவாழ் மக்களுச்கென தனிக் கடன் நிவாரணச் சட்டம் விரைவில் இயற்றப்படும்.

(ஆ) அரசின் பரிசீலனையிலிருக்கிறது.

திரு. சி. சிவப்பிரகாசம்; மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுமபோது நிவாரணச் சட்டம் பரிசீலனையில் உள்ளது கூறினார்கள். இது மூன்று ஆண்டுகளாகவே பரிசீலனையில் இருப்பதாக தெரிகிறது. இந்தச் சட்டத்தை நிறைவேற்றி செயலாக்காததால் பல்லாண்டுகளாக மலைவாழ் பகுதி மக்கள் தங்கள் நிலங்களையும் பலன் தரும் மரங்களையும் குறைந்த பணத்திற்கு வட்டியாகச் செலுத்தி வருகிறார்கள். இதனால் அவர்களது பொருளாதார நிலை வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. ஆகவே இதை சீராக்க விரைவில் இந்த புதிய ட்டத்தை பரிசீலனை செய்து நிறைவேற்ற அரசு முயலுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: 1976-ல் கூட்டுறவுத் துறையில் இயற்றப்பட்ட தமிழ்நாடு கடன் நிவாரணச் சட்டம் பழங் குடியினர் வாழும் பகுதிகளில் எவ்விதப் பயனும் மாற்றமும் அளிக்கவில்லை என அறியப்பட்டது. ஆகவே பழங்குடியினருக்கு கடன் நிவாரணம் அளிக்கும் வகையில் ஒரு சிறப்புச் சட்டம் இயற்றுவது அவசியம் என வலியுறுத்தப்பட்டது. பழங்குடியினர் எவ்வளவு வருவாய் உள்ளவராயினும் எவ்வளவு நில அளவு உடையவராயிருப்பினும் அவர்களுக்கு கடன் நிவாரணம் அளிக்க சட்டமியற்ற வேண்டுமென அமைச்சர் குழுவால் கொள்கை யளவில் முடிவெடுக்கப்பட்டது. அமைச்சரவையில் முடிவு செய்யப்பட்டதற்கிணங்க ஒரு சட்ட முன்வடிவு தயாரிக்கப் பட்டு சட்டத்துறைக்கு அனுப்பப்பட்டது. சட்டத்துறை இச் சட்ட முன்வடிவில் சில மாற்றங்கள் செய்யக் கோரி இத் துறைக்கு அனுப்பியுள்ளது. விரைவில் அது பரிசீலனை செய்யப்பட்டு இந்தக் கடன் நிவாரணச் சட்டம் மிக விரைவில் நிறைவேற்றப்படும்.

திரு. என். வரதராஜன்: இந்த மலைவாழ் மக்கள் அறியாமை யிலும், கல்லாமையிலும், வறுமையிலும் வாடும் மக்கள். அவர்கள் கடனுக்காக கந்துவட்டி, சந்தை வட்டி, வார வட்டி என்று பெறப்பட்டு அவர்கள் இன்று கொத்தடிமைகள் போல் வாழ்ந்து வருகிறார்கள். ஆகவே அவர்களுக்கு கடன் நிவாரணம் அளிக்கக்கூடிய முறையில் இந்தச் சட்டத் திருத்தம் வருமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தற்போது அது குறித்த விவரம் என்னிடம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்தை அனுசரித்து அது இயற்றப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளவர்களின் வயது வரம்பில் விலக்களிக்கும் திட்டம்.

*வினா எண். 966—திரு. எம். கே. ராஜமாணிக்கம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலைவாய்ப்பு அலுவலகத்தில் முறையாக பதிவு செய்து அவர்களுக்கு வேலை வாய்ப்பு தகுதி வயதிற்குள் எந்த ஒரு நேர்முக தேர்வும் வராமல் தகுதி வயதை இழந்தவர்களுக்கு வயது வரம்பில் இருந்து விலக்கு அளிக்கப்படுமா?

(ஆ) வேலைவாய்ப்புக்கு தகுதி என நிர்ணயிக்கப்பட்ட வயது வரம்பு மேலும் 3 ஆண்டுகள் உயர்த்தப்படுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) மற்றும் (ஆ) மேற் கண்ட வினாக்களில் குறிப்பிட்ட பொருள் பற்றிய திட்டம் ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.